முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.

அசல் வழக்கு எண். 78/2022

பிரதிவாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சம்சுல் ஆ.ஃரிப், கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் தேவி பி.சா.-1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 20-02-2023.

நான் பிரதிவாதி திருக்கோவிலின் செயல் அலுவலர் ஆவேன். இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

18-08-2022ம் தேதியில் இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம், அதன் திவான் மற்றும் நிர்வாகச் செயலாளர் எனக்கு அனுப்பிய கடிதம் **பி.சா.ஆ.-1** ஆகும். 09-03-2004ம் தேதியிட்ட விருதுநகர் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையரின் நடவடிக்கைகள் உண்மை நகல். **பி.சா.ஆ.-2** ஆகும். 7-09-2022ம் தேதியில் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து விசாரணைக்கு எங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை அசல் **பி.சா.ஆ.-3** ஆகும். வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு,வி, ஒத்தி வைக்கப்படுகிறது.